*International Journal of Linguistics and Computational Applications (IJLCA)* ISSN 2394-6385 (Print)
*Volume 3, Issue 2, April– June 2016* ISSN 2394-6393 (Online)

# இசை நாடகம்

வெ.வீரமணி
*முனைவர்பட்ட ஆய்வாளர், நிகழ்கலைத் துறை, புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி – 605 014.*
*gazhalveera82@gmail.com*

**முன்னுரை:** நம்நாட்டில் பழங்காலத்திலிருந்தே ஆடற்கலையும் பாடற்கலையும் இணைந்தே வளர்க்கப்பட்டு வந்துள்ளன. குறிப்பாக ஆலயங்களில் ஆடலும் பாடலும் சிறப்புற்று விளங்கின என்பதை நாம் அறிவோம். கடவுளர்களை நடனத் தோற்றத்தில் கண்டு வழிபடுபவர் நம் மக்கள். (எ-டு: நடராசர், காளி, கிருஷ்ணன், கணபதி ஆகிய கடவுளர்களின் தோற்றத்தைக் காண்க). தேவாரப்பாடல்களின் ஆசிரியர்களில் ஒருவரான திருஞானசம்பந்தரின் உருவமும் நடனத்தோற்றத்தில்தான் காணப்படுகிறது, இதிலி ருந்து பண்டைக்கால. ஆடவரும் பெண்டிரும் ஆடற்கலையில் தேர்ச்சி பெறுதலைப் பெருமையாகக் கருதி வந்தனர் என்று தெரிகிறது.

1) சாத்தனார் இயற்றியுள்ள 'கூத்த நூலிலும்" 2) பண்டைய ஆசிரியர் ஒருவர் இயற்றியுள்ள 'ஆடல் ஒத்து" என்ற நூலிலும், 3) இளங்கோவடிகள் இயற்றியுள்ள 'சிலப்பதிகாரத்திலும்" 4) பரதருடைய 'நாட்டிய சாஸ்திரத்திலும்" 5) சாரங்கதேவரின் 'சங்கீத ரத்னாகரத்திலும்" 6) நந்திகேஸ்வரரின் 'அபிநய தர்ப்பணம்" என்ற நூலிலும், 7) உமாபதியின் 'ஔமாபாதம்" 8) நாரதரின் 'சங்கீத மகரந்தம்" 9) ஹரிபால தேவரின் 'சங்கீத சுதாகரம்" 10) லட்சுமி நாராயணரின் 'சங்கீத சூர்யோதயம்" மற்றும் 11) 'சுத்தானந்த பிரகாசம்" 12) 'நிருத்தரத்னாவளி" 13) 'நர்த்தன நிர்ணயம்" முதலிய நூல்களிலும் ஆடல் கலையைப்பற்றிப் பல செய்திகள் காணப்படுகின்றன.

நாட்டியத்திற்கென்று தனிப்பட்ட இசை உண்டு. அத்தகைய இசையை இயற்றியுள்ளவர்கள் - நஞ்சை நால்வர் (சின்னையா, பொன்னையா, சிவானந்தம், வடிவேல்), சூரிய நாராயணசாஸ்திரி, மகாதேவ அண்ணாவி, மெரட்டூர் வெங்கடராமசாஸ்திரி, முவ்வளூர் சபாபதி ஐயர், செங்கல்வராய சாஸ்திரி முதலியோர் ஆவர். தமிழக அரசு இசைக்கல்லூரிகளின் முன்னாள் கௌரவ இயக்குநர், முத்தமிழ் இசைசித்தர் சிதம்பரம்

எஸ்.ஜெயராமன் அவர்களின் தந்தையாரான பாட்டக சுந்தர நட்டுவனாரும், பெரிய தந்தையார் மாணிக்க நட்டுவனாரும், தாத்தா ஆறுமுக நட்டுவனாரும், வழியூர் நட்டுவனாரும் நாட்டிய இசையிலும் நாட்டியக்கலையிலும் சிறந்த வல்லுநர்கள். இன்றும் இந்தக் கலையில் தேர்ச்சி பெற்றவர் பலர் சென்னையிலும் பிற இடங்களிலும் உள்ளனர்.

## கதாகாலட்சேபம்

இதை 'இசைக்கதை" என்று கூறலாம் 'தனி நபர் இசை நாடகம்" என்றும் அழைக்கலாம். வடஇந்தியாவில் இதற்குக் 'கீர்த்தன்" என்று பெயர். இந்த இசை நிகழ்ச்சியில் கீர்த்தனைகள் மட்டுமல்லாமல் வேறுபல இசை வடிவங்களையும் நாம் கேட்டு மகிழலாம். 'நிருபணம்" என்பது இத்தகைய ஓர் இசை வடிவம். இது கவர்ச்சியான மெட்டில் அமைந்த ஒரு சிறு பாடலாகும். சாகித்தியம் (சொற்பகுதி) எளிமையாக இருக்கும் எடுத்துக்கொள்ளப்பட்ட கதையின் ஒரு பகுதியை விளக்குவதாக அமைந்திருக்கும். பல்லவி, அநுபல்லவி ஆகிய பிரிவுகளையும், சில சமயங்களில் ஒரு சரணத்தையும் கொண்டிருக்கும். புராணங்களிலுள்ள பல நிகழ்ச்சிகள் 'நிருபணம்" என்ற பாடலுக்குப் பொருளாகப் பயன்படுத்தப்படுகின்றன. மெரட்டூர் வெங்கட்ராம சாஸ்திரி, முவ்வளூர் சபாபதி ஐயர் ஆகியோர் பல அழகிய நிருபணங்களை இயற்றியுள்ளனர். காலட்சேபத்தின் துவக்கத்தில் பாடப்படும் 5 பக்திப்பாடல்களுக்குப் 'பஞ்சபதி" என்று பெயர். காலட்சேபத்தில் கீர்த்தனை, நிருபணம் இவற்றோடு கையாளப்படும் வேறு இசை வகைகள் சுலோகம், பத்யம், விருத்தம், அபங்கம், நாமாவளி, சவாயி, கட்கா, லாவணி, சாகி, திண்டி, தில்லானா முதலியவைகளாகும்.

இசைக்கதை நிகழ்த்துபவருக்குப் பல பண்புகள் தேவை: கவர்ச்சியான தோற்றம் இருக்க வேண்டும். எந்த மொழியில் இசைக்கதை நிகழ்த்துகிறாரோ அதில் நல்ல புலமை இருக்க வேண்டும். இசை வழியாகவும் சில சமயங்களில் உரைநடை வழியாகவும் எடுத்துக்கொண்ட கதையை அல்லது பொருளைத் தெளிவாக எடுத்தியம்பும் திறமை அவசியம். கேட்பவரின் மனநிலை அறிந்து அதற்கேற்ற வகையில் நிகழ்ச்சியை நடத்த வேண்டும். நகைச்சுவையோடு பேசவும் தெரிந்திருக்க வேண்டும்.

இத்தகைய பண்புகளைக் கொண்ட ஒருவர் கதாகாலட்சேபம் (இசைக்கதை) நிகழ்த்தும்போது உண்மையிலேயே அந்த நிகழ்ச்சி அதைக் கேட்பவரின் செவிகளுக்கு விருந்தாக இருப்பது மட்டுமல்லாமல் உள்ளத்துக்கும், ஆன்மாவிற்கும் மிகப் பயன் அளிப்பதாக இருக்கும் என்பதில்' சிறிதும் ஐயமில்லை. இசைக்கதைகளின் வழியாக மக்களுக்கு ஆன்மீகக் கல்வியை இவ்வாறு அளிக்க முடியும். 'சங்கீத உபந்நியாசம்" என்பதும் இசைக்கதை போன்ற தேசயாகும்.

## இசை நாடகம் (கேய நாடகம்)

பலவகை இசை வடிவங்களைக் கொண்டு ஒரு கதையை விளக்க அமைக்கப்பட்டுள்ள நாடகங்களுக்கு இசை நாடகங்கள் என்று பெயர். தரு, சிந்து, லாவணி, சவாயி, கட்கா, ஓடம், சூர்ணிகை, விருத்தம், பத்யம், சுலோகம், கிருதி, கீர்த்தனை, தண்டகம், ஆனந்தக் களிப்பு, இருசொல் அலங்காரம், நாமாவளி, கண்ணி, கும்மி, ஓரடிக்கீர்த்தனை, ஓரடி தரு, ஓரடி பதம் போன்ற பல்வேறு இசைவடிவங்கள் இசை நாடகங்களில் கையாளப்படுகின்றன. வேகமாகப் பாடப்படும் இசை, மெதுவாகப் பாடப்படும் இசை, நடுத்தரமாகப் பாடப்படும் இசை, பலவித உணர்ச்சிகளை (ரசங்களை)க் காட்டுகின்ற இசை, தினநபர் பாடும் இசை, குழுவினர் பாடும் இசை, வார்த்தையில்லாத இசை - இவ்வாறு பல வகைகளை நாம் இசை நாடகத்தில் காண முடியும்.

| இயற்றியவர் | இசை நாடகங்கள் | |
|---|---|---|
| தியாகராசர் | நௌகா சரித்திரம் | (தெலுங்கு) |
| | பிரகலாத பக்தி விஜயம் | (தெலுங்கு) |
| அருணாசலக்கவிராயர் | இராமநாடகம் | (தமிழ்) |
| கோபாலகிருஷ்ண பாரதியார் | நந்தனார் சரித்திரம் | (தமிழ்) |
| ஷாஜி மகாராஜா | பல்லகி சேவாபிரபந்தம் | (தெலுங்கு) |

## நாட்டிய நாடகம் (நிருத்திய நாடகம்)

நாட்டியத்தை ஓர் இன்றியமையாத அம்சமாகக் கொண்ட இசை நாடகத்துக்கு நாட்டிய நாடகம் என்று

பெயர். இங்கு ஒவ்வொரு உறுப்பினரும் நாட்டியத்தின் மூலம் தங்கள் நடிப்பைக் காட்ட வேண்டும். பாடகர்கள் நாட்டியத் துக்குரிய இசைப்பகுதிகளைப் பாடுவர். (சாதாரண நாடகம் அல்லது இசை நாடகத்தில் நடப்பது போல் அல்லாமல் ஒவ்வொரு உறுப்பினரும் அரங்கத்தில் முதன்முறையாக தோன்றும்போது 'பிரவேசதரு" என்ற பாடலுக்கு ஏற்ற வகையில் நாட்டியம் ஆடவேண்டும். உறுப்பினர் நாட்டியத்தில் தங்களுக்குள்ள திறமையைக் காட்டுவதற்கு 'பிரவேச தருக்கள்" நல்ல வாய்ப்புக்கள் ஆகும். தருக்கள், கவர்ச்சியான இராகங்களில் அமைக்கப்பட்டிருக்கும் நடனம் செய்வதற்கு உதவும் வகையில் எத்துக்கடை சுரங்களையும் கொண்டிருக்கும். மெலட்டூர் வெங்கடராமசாஸ்திரி அவர்கள் நாட்டிய நாடகங்களைத் தெலுங்கில் இயற்றியுள்ளார். தமிழில் இயற்றப்பட்டுள்ள குறவஞ்சி நாடகங்களும் அழகான நாட்டிய நாடகங்களாகும். 1)கவிகுஞ்சர பாரதி யார் இயற்றியள்ள அழகர் குறவஞ்சியும் 2) திருக்குற்றால குறவஞ்சியும் 3) கும்பேசர் குறவஞ்சி 4) விராலிமலைக் குறவஞ்சி 5) தியாகேசர் குறவஞ்சி 6) குமரலிங்க குறவஞ்சி 7) செந்தில் குறவஞ்சி 8) தமிழரசி குறவஞ்சி 9) சரபேந்திர பூபால குறவஞ்சி 10) பெத்லகேம் குறவஞ்சி ஆகிய வையும் நல்ல நாட்டிய நாடகங்களாகும். வீதி நாடகங்களும், யக்'கானங்கள் என்ற நாட்டிய நாடகங்களும் தமிழிலும் தெலுங்கிலும் உள்ளன. தியாகராசரின் பாட்டனாரான கிரி ராஜகவி என்பவர் சில நல்ல யக்'கானங்களை எழுதியுள்ளார்.

## பாகவத மேள நாடகம்: - (நாட்டிய நாடகம்)

பாகவதர்கள் பங்கு கொள்ளும் நாட்டிய நாடகங் களுக்குப் பாகவதமேள நாடகங்கள் என்று பெயர். இவர்கள் குருக்கள் இனத்தைச் சேர்ந்தவர்கள். நாட்டிய நாடகங்களில், பெண்டிரின் பகுதிகளைக்கூட இவர்களே மாறுவேடத்துடன் நடிப்பதுண்டு.

இந்த நாட்டிய நாடங்களில் மரபு இசைக்கும், மரபு நாட்டியத்துக்கும் அதிக முக்கியத்துவம் உண்டு. சாகித்தி யத்தின் தரம் மிக உயர்ந்ததாக இருக்கும். கதாநாயகன் மற்றும் இதர முக்கிய உறுப்பினர்களுக்குத் தனித்தனி பிரவேச தருக்கள் பாடப்படும் உறுப்பினர்கள் அவற்றிற்கேற்ற வகையில் நாட்டியம் ஆடுவார்கள்.

'மெய்' என்பது ஒருவகை நாட்டியமாகும். பாகவதமேள நாடங்களில் பிரவேசதரு முடிந்ததும் கதாநாயகி அல்லது கதாநாயகன் ஆடும் நாட்டியம் இது. நிருத்தம் செய்வதற்கு (அதாவது கால்களினால் பல நாட்டிய வேலைப்பாடுகளைச் செய்வதற்கு) மெய் மிகவும் உதவுகிறது. பெண்களுக்கு உரிய மெய்திஸ்ரகதியிலும், ஆண்களுக்கு உரிய மெய் சதுஸ்ரகதியிலும் இருக்கும். மெய்யி லிருந்துதான் இன்று நம் பரதநாட்டிய நிகழ்ச்சிகளில் முதன் முதலில் காணும் அலாரிப்பு தோன்றியதாக கூறப்படுகிறது.

பாகவதமேள நாடகங்களில் சிறுசிறு பகுதிகளின் முடிவில் அந்திய ஜதிகளும், சில பாடல்களுக்கு முன்பு முகஜதிகளும் (எடுப்புத் தீர்மானங்களும்) கையாளப் படுகின்றன. கணேசர், நரசிம்மர் ஆகியோர் பகுதியை நடிப்பவர்கள் முகமூடி அணிந்து நடிப்பர். பேய்கள் தோன்ற வேண்டிய நேரத்தில் அதற்கேற்ற முகமூடிகள் அணியப்படும். நாட்டிய நாடகங்களின் துவக்கத்தில் 'கட்டியக்காரன்" என்ற நடிகரும் பங்கு கொள்வது வழக்கம். சொற்களாலும், செயல் களாலும் வேடிக்கைக் காட்டுவதற்கு என்று 'கோணங்கி" என்ற மற்றொரு நடிகரும் பங்கு கொள்வது உண்டு. பாகவதமேள நாடகங்களில் துணைக்கருவிகள் முக்கிய பங்கை வகிக்கின்றன என்பது நினைவில் கொள்ள வேண்டிய தென்று, நன்றாக நடத்தப்படும் பாகவதமேள நாடகங்கள் கண்களுக்கும் செவிகளுக்கும் விருந்தாக அமையும்: பக்தியை வளர்ப்பதற்கும் உதவும்.

மெலட்டூர் வெங்கட்ராம சாஸ்திரியார், பாகவதமேள நாடகங்களை இயற்றுவதில் மிகச்சிறந்த வல்லுநர் அவர் இயற்றியுள்ள நாட்டிய நாடகங்கள் மெலட்டூர், சூலமங்கலம், சாலியமங்கலம், ஊத்துக்காடு, நல்லூர், தெப்பெருமாள் நல்லூர் முதலிய இடங்களில் அமைந்துள்ள ஆலயங்களுக்கு முன்னர் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளன.

## குச்சிப்புடி: (நாட்டிய நாடகம்)

குச்சிப்புடி அல்லது குசேலபுரி என்பது ஆந்திர மாநிலத்தில், கிருஷ்ணா மாவட்டத்திலுள்ள ஒரு கிராமம். இது பாகவதமேள நாடகங்கள் அதிகமாக நிகழ்த்தப்படும் ஓர் இடம். இந்த கிராமத்தில் ஒரு தனிவகை நாட்டியத்தைச் சித்தேந்திரயோகி என்பவர் உருவாக் கியுள்ளார். இதற்குக் குச்சிப்புடி நாட்டியம் என்ற பெயர் வழங்கப்பட்டிருக்கிறது. கிருஷ்ண பக்தியைப் பரப்புவதற்காக சித்தேந்திர யோகி 'சத்திய பாமா கலாபம்" என்ற நாட்டிய நாடகத்தை எழுதிப் பிறருக்குக் கற்றுக்கொடுத்தார். இந்த நாட்டிய நாடகத்தில் ஆகிரி, ஆனந்த பைரவி, நாட்டை முகாரி, காம்போஜி, பந்துவராணி முதலிய இராகங்கள் கையாளப்பட்டுள்ளன. இன்று, குச்சிப்புடி என்ற இடத்தில் 'ஸ்ரீ சித்தேந்திர கலா 'ே்த்திரம்" என்ற நிறுவனம் இக்கலையைப் பேணி வருகிறது. இந்த நாட்டியத்தில் வல்லுநர் வேதாந்தம் சத்திய நாராயண சர்மா, வேம்பட்டிசின்ன சத்யம் ஆகியோர் ஆவர்.

## முடிவுரை

பலவகை கதையை விளக்க அமைக்கப்பட்டுள்ள நாடகங்களுக்கு இசை நாடகங்கள் என்று அழைக்கப் படுகிறது. இவை தற்போது கல்லூரிகளிலும். பல்கலை கழகத்திலும், பயிற்சி வகுப்புகளாக நடத்தி வருகின்றன. பழகாலத்து இசை நாடகங்கள் அழியாமல் இருப்பதற்காக மத்திய அரசு மனித வள மேம்பாட்டு துறை பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் போட்டிகளும் நடத்தி இதுபோன்று நாடகங்கள் அழியாமல் இருக்க பல்வேறு உதவிகளும் கல்லூரிகள், மத்திய அரசும் மாநில அரசும் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் ஒவ்வொரு பள்ளிகளுக்கு தனி இசை, நடனம், ஓவியம், நாடகம் ஆசிரியர்கள் பணியில் அமர்தினால், நமது நாட்டில் பாரம்பரிய கலைகள் அழியாமல் நாம் பாதுகாக்க முடியும்.

## <u>துணை நின்ற நூல்கள்</u>

[1] செல்லதுரை.பி.டி., தென்னக இசையியல், வைகறைப்பதிப்பகம், திண்டுக்கல்-14, 2010.

[2] தணபாண்டியன்.து.ஆ., புதிய…ராகங்கள்,…தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989.

[3] பத்மா சுப்ரமணியம், பரதக் கலைக் கோட்பாடு, வானதி பதிப்பகம், சென்னை, 2012.

[4] அங்கயற்கண்ணி.இ, இசையும் இலக்கியமும், கலையகம், சென்னை, 1991.

குறிப்பு – கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி துணைநின்ற நூல் பட்டியலை அமைத்து தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. அதாவது, ஆசிரியர் பெயர்., நூல் பெயர், பதிப்பகம் பெயர், இடம், ஆண்டு.

உதாரணம்:

சண்முகம்,செ.வை., மொழி வளர்ச்சியும் மொழி உணர்வும், மணிவாசகர் பதிப்பகம், சென்னை,1989.